1975 நவம்பர் 10]

வரதட்சணை ஒழிப்பு

திரு. கே. எஸ். கணபதி (திரு. டி. வி. டி'மாண்டி சார்பில்): மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:—

(அ) 1961 ஆம் ஆண்டு வரதட்சணை ஒழிப்புச் சட்டத்தை (மத்தியச் சட்டம் 21/1961) கண்டிப்பாகச் செயற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை அரசு மேற் கொண்டுள்ளதா?

(இ) இம் மாநிலத்தில் வரதட்சணை என்ற பெயரில் நிகழும் தீமைகளைக் கண்டறிவதற்கான ஆய்வுகள் ஏதேனும் அரசால் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) வரதட்சணைக் கொடுமைகள் பற்றி வரும் புகார்களை விசாரித்து, தேவையானல் வழக்கு தொடர ஒப்புதல் அளிக்கும் அதிகாரம் மாநில பிறப்பு, இறப்பு, திருமணத் தலைமைப்பதிவாளருக்கு அளிக்கப்பட்டுள்ளது.

(இ) இல்லை.

திரு. கே. எஸ். கணபதி: 1961 ஆம் ஆண்டுக்குப் பிறகு இந்தக் குற்றத்திற்காக குற்றஞ் சாட்டப்பட்டவர்கள் எத்தனை பேர்கள்?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: அதுபற்றிய விவரம் இல்லை.

Service Connections for Pumpsets.

* 100. *Q.*—THIRU WILSON APPOLLOS (on behalf of THIRU Y. VENKATESWARA DIKSHIDAR): Will the Hon. the Minister for Industries be pleased to state:

(*a*) whether service connections for pumpsets have not been given to a number of agriculturists in Idur Panchayat of Alathur Union, Tiruchirappalli district, even though they have remitted the prescribed amounts; and

(b) if so, the reasons therefor?

[1975 நவம்பர் 10

விசை ஏற்றங்களுக்கு மின் இணைப்புகள்

திரு. வில்சன் அப்போலோஸ் (திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் சார்பில்): மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

அ) திருச்சி மாவட்டம் ஆலத்தூர் ஒன்றியத்தில் இடேர் பஞ்சாயத்தில் பல விவசாயிகள் விசை ஏற்றத்திற்கு பணம் கட்டியும் மின் இணைப்புகள் கொடுக்கப்படாமல் இருக்கின்றனவா?

(இ) ஆம் எனில், காரணம் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: (அ) ஆம்.

(இ) முன் காப்புத் தொகை வசூல் செய்யப்பட்ட 64 பேர்களில் ஒருவருக்கு மின் இணைப்பு வழங்கப்பட்டிருக்கிறது. ஒருவர் இருக்குமிடம் தெரியவில்லை. 62 பேர்களுக்கு மின் இணைப்பு வழங்கப்பட வேண்டும். இதில் ஒருவர் தான் விசையேற்றம் பொருத்தியுள்ளார். ஆனல் அவரும் மின் இணைப்பு பெறுவதற்கான தயார் நிலையில் இல்லை. மற்றவர்கள் இன்னும் விசையேற்றம் பொருத்தவில்லை.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: வினாக்கள்–விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

2. அறிவிப்புகள்.

(1) ஆளுநரிடமிருந்து செய்தி

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: தமிழ்நாடு 1975 ஆம் ஆண்டு சம்பளங்கள் வழங்கல் (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவை ஆய்விற்கு எடுத்துக் கொள்வதற்கு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.